REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 83630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 8உ செவ்வாய் (23—7—57) ★ ★ வெளியூர்: ஆடி 9உ புதன் (24—7—57) [இதழ் 32

470 தேர்தல் வழக்குகள் !

புதுடில்லி, ஜூலை 22—

"நடைபெற்ற தேர்தல்களுக்குப் பிறகு, பல மாநிலங்களிலுமாக சுமார் 470 தேர்தல் வழக்குகள் எழுந்துள்ளன" என்று, சட்ட மந்திரி சென், மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இவற்றில் 57 வழக்குகள் மக்கள் சபைத் தேர்தலைப் பொறுத்தவை என்றும், எஞ்சியவை மாநில சட்டசபைகளைப் பொறுத்தவை என்றும், உ. பி. மாநிலத்திலிருந்து மட்டும் 99 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன என்றும் அந்த மந்திரி கூறியிருக்கிறார்.

அந்தமானில் ஒரு சர்வாதிகாரி!

கேள்வி கேட்பாரற்ற நிலையில் அதிகாரிகள் புரியும் அதிக்கிரமங்கள்!

காங்கிரஸ் தலைவர் இரத்தினம் தகவல்

கல்கத்தா, ஜூலை 23—

அந்தமானில் ஒரு சர்வாதிகாரி! ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது! ஆனால் அந்தமான், மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்திலிருக்கும் தீவு! அங்கு நிர்வாக அதிகாரியாக இருப்பவர் வைத்ததுதான் சட்டம் என்ற நிலை நிலவுகிறதாம்!

முன்னைய அந்தமான் சங்கம் இன்று, அகில இந்திய காங்கிரசுடன் இணைக்கப்பட்டிருக்கிறது; அதன் தலைவரான இரத்தினம் என்பார், இப்போது அந்தமான் நிலை குறித்து முறையிடுவதற்காக பண்டிதரைச் சந்திக்க டெல்லி செல்லும் வழியில் இங்கு பத்திரிகையாளரிடம் கூறியதாவது :-

"'இந்தியன் பினல் கோடு' சட்டம் அந்தமான் அதிகாரிகளைக் கட்டுப்படுத்தாது என்பதால், அந்த அதிகாரிகள் கேள்வி கேட்பாரின்றி எந்தக் குற்றத்தையும் செய்ய முடிகிறது—செய்கிறார்கள். மேலும் அந்தமானுக்கென பாராளுமன்றத்தில் ஒரே ஒரு நியமனப் பிரதிநிதி இருக்கிறார். அதனால், அந்தமான் மக்களுக்கு அடிப்படை ஓட்டுரிமை இல்லாதிருக்கிறது.

"அத்துடன், நிர்வாக அதிகாரியாக இருக்கும் டி. ஜி. என். அய்யர் என்பார், ஆலோசனை சபையின் எந்த யோசனைகளையும் சிபாரிசுகளையும் ஏற்றுக்கொள்வதில்லை. இந்த நிலையில், இன்று அந்தமானில் முழு சர்வாதிகாரம் நடைபெறுகிறது.

"அந்தமான் வளர்ச்சிக்கென இரண்டாம் திட்டத்தில் ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டிருந்தும், இன்றுவரை எதும் செய்யவில்லை.

"திட்டத்தின் முக்கியமான நோக்கமே, மக்களுக்கு வேலை தேடித் தருவதுதான் என்று கூறப்படுகிறது. ஆனால், அந்தமானில் ஆலை ஒன்று மூடப்படவிருப்பதாகவும், இதனால் 200 பேர்வரை வேலை இழக்க நேரிடும் என்றும் அச்சுறுத்தப்படுகிறது.

"அத்துடன், கடந்த பிப்ரவரி திங்களில் மத்திய சர்க்கார் அனுமதித்த சம்பள உயர்வும் தொழிலாளருக்குத் தரப்படவில்லை."

தொடர்ந்து பேசிய இரத்தினம், அந்தமானில் கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 8,000 அகதிகள் குடியேறியுள்ளனர் என்றும், அவர்களில் பலர் இப்போது அந்தமானிலிருந்து வெளியேறிவிடவே விரும்புகின்றனர் என்றும் கூறியிருக்கிறார்.

படாஸ்கர் அறிக்கை : ஒரு தகவல்

சென்னை, ஜூலை 23—

சென்னை—ஆந்திரா எல்லைத் தகராறு சம்பந்தமாக இந்தியப் பேரரசால் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்ட படாஸ்கரின் அறிக்கை இன்னும் இருநாட்களில் இந்திய சர்க்காரிடம் சமர்ப்பிக்கப்படக் கூடுமாம். தீர்ப்பின் பிரதிகள் இரு மாநில சர்க்கார்களுக்கும் கிடைக்குமாம்.

சர்க்கார் ஏற்காதாம்!

அமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஜூலை 23—

கைக்குத்தல் அரிசியையே தமிழ் நாட்டு மக்கள் யாவரும் உண்ணும் பொருட்டு நெல் அரைக்கும் ஆலைகளுக்குத் தடை விதிக்கவேண்டும் என்ற யோசனையை சர்க்கார் ஏற்பதற்கில்லை என்று விவசாய அமைச்சர் பி. பக்தவத்சலம் சென்னை சட்டசபையில் கூறியுள்ளார்.

அசாமில் தொழிற்சாலை

இறுதி முடிவு என்ன?

புதுடில்லி, ஜூலை 22—

உத்தேச எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை அசாம் எல்லைக்குள்ளேயே நிறுவ வேண்டும்; நிறுவினால், இலாபகரமாக அதை நடத்த முடியும் என்பதை, டில்லி சென்றுள்ள அசாம் மாநில காங்கிரஸ் தூதுக் குழுவினர், பண்டித நேரு, மற்றும் மேலிடத்தவரிடம் எடுத்துரைத்திருக்கின்றனர்.

கௌஹாத்தியில் நிறுவினால் தொழிற்சாலைக்கு ரூ. 28 கோடி செலவாகும் என்றும் தூதுக் குழு எடுத்துரைத்திருக்கிறது.

"திட்டத்திற்குத் தேவைப்படுகிற இரயில்வே போக்குவரத்து வசதிகளை டில்லி சர்க்கார், தங்களின் இரயில்வே அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செய்துதர வேண்டுமே தவிர, அசாம் சர்க்கார் தலையில் அந்தச் செலவைச் சுமத்தக் கூடாது.

"மேலும், பலர் பயப்படுகிற மாதிரி, கௌஹாத்தியில் தொழிற்சாலையை நிறுவுவது ஒன்றும் பாதுகாப்பற்றது அல்ல; ஏனெனில் அது, நாகராகாதியாவிலிருந்து 220 மைல் தொலைவிலும், பாகிஸ்தான் எல்லையிலிருந்து 140 மைல் தொலைவிலும் இருக்கிறது. இரயில்வே வேலைகளையும் தொழிற்சாலை வேலைகளையும் ஒன்றாகத் துவங்கினால், மூன்று ஆண்டுகளுக்குள் திட்டத்தை முடித்துவிடலாம்"

என்றும் தூதுக் குழுவினர் எடுத்துரைத்திருக்கின்றனர்.

பண்டித நேருவும் பிறரும், தொழிற்சாலையை பீகாரில் நிறுவுவது என்று மேற்கொண்ட முடிவுக்கான காரணத்தை விளக்கியிருக்கின்றனர். என்றாலும் தூதுக்குழுவினர், தங்கள் கோரிக்கையை வற்புறுத்திவருகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

மீண்டும் குழுவினர், பண்டிதரைச் சந்திக்கும்போது இறுதி முடிவு அறிவிக்கப்படுமாம்.

டாக்டர் பி. வரதராசுலு (நாயுடு) மறைவு

40 ஆண்டுகளுக்கு மேல் தமிழ் மக்களுக்குப் பாடுபட்ட உத்தமர்

தமிழர் எழுச்சிக்கு வித்திட்டவர்; தமிழ் மொழி வளத்துக்கு உரமூட்டியவர்

சென்னை, ஜூலை 23—

டாக்டர் பி. வரதராசுலு நாயுடு அவர்கள் தமது 70-வது வயதில் இன்று காலை 1-40 மணியளவில், சென்னை-மவுண்ட் ரோடு சர்க்கார் மாளிகையில் உள்ள தமது இல்லத்தில் இயற்கையெய்தினர் என்ற சோகச் செய்தியை அறிவிக்க மிக வருந்துகிறோம்.

டாக்டர் வரதராசுலு அவர்கள் கடந்த ஒரு திங்களுக்கு மேலாகவே உடல்நலம் குன்றி, சிகிச்சை பெற்றுவந்தார்; எனினும், பலன் இல்லாதுபோயிற்று.

அவரது ஆவி பிரிந்தபோது அவரது மனைவியாரும், இரு மக்களும் அருகில் இருந்தனர். இன்று மாலை 5-மணியளவில் சவ அடக்கம் நடைபெறும் என்று தெரியவருகிறது.

டாக்டர் நாயுடு அவர்களுக்கு ஆறு ஆண் மக்களும், இரு பெண்களும், மனைவியாரும் இருக்கின்றனர்.

அவரது மறைவுச் செய்தி கேட்டதும் மாநில முதன் மந்திரி காமராசர், மற்றும் மந்திரிகள் பக்தவத்சலம், மாணிக்கவேலர், சட்டசபைத் தலைவர் டாக்டர் யு. கிருஷ்ணராவ் ஆகியோர் அவரது இல்லம் சென்று துக்கம் விசாரித்தனர்.

டாக்டர் நாயுடு அவர்கள் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக அரும் பணியாற்றியவர். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, பொதுவாழ்வில் ஈடுபட்டு, பல துறைகளிலும் தமிழ் மக்களுக்குச் சேவை செய்தவர்.

வெள்ளையராட்சிக்கு எதிராக விடுதலைப் போர்க் கொடியினை தமிழகத்தில் உயர்த்தியவர்களில் டாக்டர் வரதராசுலு அவர்கள் முதன்மையானவராகும்.

நாட்டு விடுதலைக்காக, வெஞ்சிறைக் கொடுமைகளை அனுபவித்தவர். காங்கிரஸ் இயக்கத்தில், சேர்ந்து தீவிரமாகப் பணிபுரிந்த பழம் பெரும் தலைவர்களுள், முதலிடத்தில் வைத்து மதிக்கப்பட்டவர், டாக்டர் வரதராசுலு அவர்களாவர்.

கதர் அபிவிருத்திக்கு, தமிழ் நாட்டைப் பொறுத்து மூல காரணமாயிருந்தவர்.

அந்த நாட்களில், போராட்ட காலத்தில், மக்களுக்கு விடுதலைத் தாகமூட்டும் சிறந்த சொல்லாளராக விளங்கியவர் டாக்டர் நாயுடு.

தமிழ்நாடு காங்கிரசின் சரிதத்தில், பெரும்பகுதி இவருடைய வாழ்வோடு இணைந்ததுதான் என்றாலும், மிகையாது.

கருத்து வேறுபாடு கொண்ட பலரையும் மதிக்கும் நல்ல பண்பும் உயரிய ஒழுக்க சீலமும் படைத்தவர்.

சென்னை சட்டசபையில் 1952 முதல் 1957 வரை உறுப்பினராயிருந்தும் அரும்பணி யாற்றியவர்.

டாக்டர் நாயுடு அவர்கள் தமிழ் பத்திரிகைகளுக்கு வழிகாட்டியாக விளங்கியவர்; தமிழ் மொழி வளம் பெறவும், தமிழ் உணர்வு நாட்டில் பரவவும் வாழ்நாள் முழுதும் பாடுபட்டவர்.

டாக்டர் நாயுடு அவர்களின் மறைவினால் தமிழகம் ஒரு நற்புதல்வரை இழந்து நிற்கிறது. அவரது மறைவால் வருந்தும் அனைவருடன் நாமும் கலந்து கொள்கிறோம்.

அவரது குடும்பத்தார்க்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

சென்னை சட்டசபை அஞ்சலி செலுத்தியது

டாக்டர் நாயுடு அவர்களின் மறைவு குறித்து, இன்று காலை 9-மணிக்கு சட்டசபை கூடியபோது, சபைத் தலைவர், டாக்டர் யூ. கிருஷ்ணராவ் அவர்கள் அறிவித்துவிட்டு, அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், சபையின் நடவடிக்கைகளை அரைமணி நேரம் ஒத்திவைத்தார்.

பொதுச்செயலாளர் அனுதாபம்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் டாக்டர் பி. வரதராசுலு (நாயுடு) அவர்கள் மறைவு குறித்து அறிவிப்பதாவது :—

தமிழகத்தில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த அடிப்படைக் காரணமாக விளங்கியவர்களிலே முக்கியமான ஒருவரும், தமிழ்ச் செய்தித் தாள் உலகைச் செவ்வையாக்கிச் சீர்படுத்திப் பல எழுத்தாளர்களுக்கு ஆசிரியராயும் எடுத்துக்காட்டாயும் விளங்கியவரும், தமிழ் மொழி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவரும், தொழிலாளர் நலன் கருதி உழைத்துவந்தவரும், பிற்படுத்தப்பட்ட மக்கள் —ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டவரும், யாருக்கும் அஞ்சாமல் துணிந்து செயலாற்றும் திறம் படைத்தவரும், மாற்றுக் கட்சியினராலும் நன்கு மதிக்கப்பட்டவருமான அருந் தலைவர் டாக்டர் வரதராசுலு அவர்கள் இயற்கையெய்திய செய்திகேட்டுத் திடுக்குற்றேன்.

துக்கமும் துயரமும் உள்ளத்தைக் குடைகின்றன. தமிழகம் ஒரு அரசியலறிஞரை இழந்து தவிக்கும் நிலை அவரது இழப்பால் ஏற்பட்டுள்ளது. அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர் ஆகியோருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதைத் தவிர வேறு என்ன ஆறுதல் மொழிய இயலும்.

அவரது தொண்டுகள் பிறர்க்கு எடுத்துக் காட்டுக்களாக அமையுமாக! அவரது பெயரும், புகழும் நீடுழிக்காலம் நிலைபெறுவதாக!

சூரிய சக்தியைப் பயன்படுத்த ஆராய்ச்சி

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, ஜூலை 22—

சூரிய சக்தியை வீட்டு உபயோகங்களுக்கும், தொழில்துறை காரியங்களுக்கும்பயன்படுத்துவது பற்றிய ஆராய்ச்சிவேலைகள், தேசியப் பௌதீக ஆராய்ச்சிக் கூடத்தில் அதன் மாமூல் அலுவல்களில் ஒரு பகுதியாக மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்றும் அத்தகைய ஆராய்ச்சி சம்பந்தமாகச் செய்யப்பட்ட செலவுகளுக்குத் தனிக் கணக்கு எதுவும் வைக்கப்படவில்லை என்றும் கல்வி-விஞ்ஞான ஆராய்ச்சி மந்திரி மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

காற்று சக்தியைப் பெருமளவில் பயன்படுத்துவது சம்பந்தமான திட்டம் ஒன்றுக்கு ரூ. 34,75,264 செலவழிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் கூறினார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 23—7—57 செவ்வாய்

அச்சம் ஏன்?

'மாணவர் உலகில் அரசியல் புகுவது கவலைக்குரிய விஷயம். பள்ளிக்கூடம் அல்லது கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகு மாணவர்கள் அரசியலைப்பற்றி நினைத்தால் போதும்' என்று சென்னை மாநில நிதி அமைச்சர் இப்போது அதிகமாகவும், சற்று தீவிரமாகவும் வலியுறுத்திப் பேசிவருவதையும், இதற்கு ஏற்றமுறையில் சில ஏடுகள் துதிபாடுவதையும் கண்டு, நாட்டில் இந்த அளவுக்கு இப்போது இதுகுறித்து வற்புறுத்தவேண்டிய திடீர் அவசியம் என்ன என்று நினைக்கத் தோன்றுவதில் தவறு இருக்கமுடியாது.

மாணவர்களை, 'நேரடியாக அரசியலில் ஈடுபடுங்கள்' என்று எவர் அழைப்பு விடுத்துள்ளனர்—இன்றைய மாணவர்கள் கல்விமீது நாட்டம் செலுத்தாத அளவிற்கு எவர் செயல்படுகின்றனர் என்பதை அமைச்சர் விளக்காமல் இருப்பதிலிருந்து அவர், வேறு பல காரணங்களை மனதில் கொண்டு இவ்வாறு பேசி வருகிறார் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

மேலும், அகில இந்திய காங்கிரஸ் குழுவில்—தேர்தலுக்குப் பிறகு கூட்டப்பட்ட கூட்டத்தில், பண்டித நேரு, 'இன்று காங்கிரஸ் அடைந்துள்ள பலவீனத்திற்குக் காரணம், மாணவர்களிடையே காங்கிரஸ் தனது தொடர்பை இழந்ததும் ஒன்றாகும் என்று குறிப்பிட்டு, 'எதிர்காலத்தில் காங்கிரஸ், மாணவர் உலகத்துடன் நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டும்' என்றும் அறிவுரை கூறியுள்ளார் என்று செய்தி வெளியிடப்பட்டது; நாட்டு மக்களும் இதனை அறிவார்கள்.

"இப்படி டில்லி எசமானர்கள், காங்கிரஸ் பேரவையில் கூறிய யோசனைக்கும் இங்கே உள்ள ஆட்சியாளரின் போக்குக்கும் எந்த அளவு மாறுதல் உள்ளது என்று எண்ணிப் பார்த்தால், நிதி அமைச்சரின் பொருத்தமற்ற அறிவுரையின் உட் கருத்து வெளிப்படும் என்றே கருதுகிறோம்.

இந்த அளவிற்கு திடீர் அச்சம் ஏன் ஏற்பட்டது என்று ஆராய்ந்தால், ஏதோ ஆபத்தான சூழ்நிலையை தவிர்த்துக் கொள்ளவும், மாணவர்களின் ஆதரவை ஒரு தனிப்பட்ட கட்சிக்கு தேடும் நோக்கத்துடனும் செய்யப்பட்டது என்றே கருதவேண்டியுள்ளது.

'மாணவர்களுக்கு அரசியல் கூடாது' என்று கூறுவதற்கு முன், வாழ்க்கையில் அரசியல் இல்லாத துறை உண்டா என்று எண்ணிப்பார்க்கவேண்டும். அரசியல் வாழ்வின் நிழல், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பின் தொடர்ந்தே தீரும்.

ஆனால், மாணவர்களை நேரடியாக அரசியலில் ஈடுபடுத்தாத வகையில் நாட்டின் அரசியல் நடைபெறவேண்டியது ஆட்சியாளரின் பொறுப்பாகும். அதனால்தான், மாணவர்கள அரசியலில் ஈடுபடும் அவசியத்திறகான நிலைமையை நாட்டில் நிலவச் செய்யக்கூடாது என்று நாம் அரசாங்கத்திற்கு எடுத்துரைத்து வந்துள்ளோம்.

மக்களின் விழிப்புணர்ச்சிக்கு விரோதமாகவும், நாட்டுப் பற்றை நாசமாக்கும் அளவிற்கும் இன்றைய அரசியல் அமையக்கூடாது; மாணவர்கள் அரசியலில் ஈடுபடவேண்டிய நிலைமையை ஆட்சியாளர்கள் உண்டாக்கக்கூடாது.

'மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது' என்று கூறிவிட்டு வேறு பல வாய்ப்புகளின் மூலம் ஆளும் கட்சியினர் மட்டும் மாணவர்களுடன் தொடர்புகொள்வதும், மற்ற கட்சிகளைப் பற்றித் தவறான பிரச்சாரம் செய்வதுமான நிலை நாட்டில் ஏற்படக்கூடாது.

சொல்லுக்கும் செயலுக்கும் மாறுபாடுகள் ஏற்படாத அளவிற்கு ஆட்சியாளர் இருக்கமுடியுமா என்பதை முதலில் முடிவு செய்துக்கொள்ள வேண்டும்.

அறிவிலும், நாகரிகத்திலும் தலைசிறந்த நாடுகளில் ஒன்றாகத் திகழும் பிரிட்டனில், மாணவர்கள் சாதாரணமாக அரசியலில் ஈடுபடுவதில்லை. அந்த அவசியம் ஏற்படாதவாறு அந்த நாட்டின் அரசியல் முன்னேறியுள்ளது. ஆனால், சூயஸ்கால்வாய் தகராறு ஏற்பட்டபோது மாணவர்கள் செயலற்று இருக்கவில்லை. ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள்—அரசியலில் ஈடுபட்டார்கள்—இல்லை; அரசியல், அவர்கள் ஈடுபடவேண்டிய அளவில் அமைந்தது.

இந்த இந்திய உபகண்டத்திலும், அசாம் மாநிலத்தில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்று செய்தி வெளியாயிற்று. நமது நிதி அமைச்சர் அகராதிப்படி அவர்கள், தவறான பாதையில் சென்ற மாணவர்கள். ஆனால், எந்தக் காரணத்தைக்கொண்டு அவர்கள் அரசியலில் ஈடுபட்டார்கள் என்று எண்ணிப் பார்த்தால், அவாகள் நாட்டுப் பற்றுக கொண்ட காரணத்தினால் தான் என்பது தெளிவாகும். எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அசாம் மாநிலத்தில் அமையவேண்டும் என்று மக்கள் விரும்பியும்கூட, மத்திய அரசு, பீகார் மாநிலத்தில் அதனை அமைக்க முடிவு செய்ததைக்கண்டு மாணவர்கள் கிளர்ச்சி செய்துள்ளனர்; இதை எந்த அரசியல்வாதியும், தேசத் துரோகச் செயல் என்று கூற மாட்டார்கள் என்றே இந்த சனநாயக ஆட்சியில் நாம் கருதுகிறோம்.

எனவே, அரசியல், மாணவர்களை இழுக்கும் நிலைக்கு, நாட்டை ஆளுபவர்கள் முற்படக்கூடாது. இதை மறந்து, 'மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்ளக்கூடாது' என்று கூறுவது அறிவுடைமையாகாது என்றே கருதுகிறோம்.

மாணவர்கள் உயிரோட்டத்துடன் அரசியல் பிரச்சினைகளைக் கவனிப்பதிலும், அரசியலை மறக்காது நாட்டைப் பற்றிய பிரச்சினைகளை ஆராய்ந்து வருவதிலும் தவறு ஏற்பட்டு விடாது.

வாழ்ந்த நாடு இன்று வீழ்ந்ததேன்? ஆண்ட இனம் அடிமைப்பட்டுக் கிடப்பதேன்? வளர்ந்த மொழி சிதைந்ததேன்? ஒற்றுமைக் குலைந்ததேன்? வேதனைகள் அதிகரிப்பதேன்? கடல் கடந்த நம்மவர் கண்ணீர் வடிப்பதேன்? —என்றெல்லாம், எண்ணிப்பார்த்து, ஏடுகளைப் புரட்டிப் பார்த்து, அறிந்தோரிடம் கேட்டுத் தெரிந்து, விழிப்புணர்ச்சியும் நல்லறிவும் மாணவர்கள் பெற்றிருப்பதில் தவறிருக்க முடியாது.

எனவே, நாட்டுப்பற்றை நாசமாக்கவும், இன உணர்ச்சியை முறியடிக்கவும், மொழியை அடிமைப்படுத்தவும், இயற்கை வளத்தை அந்நியர் சுரண்ட இடங்கொடுத்தும், நாட்டை அடிமைப்படுத்தவுமான நாச வேலைகளில் ஆட்சியாளர் ஈடுபடாவிட்டால் நிச்சயம் மாணவர்கள் அரசியலில் நேரடியாக ஈடுபடமாட்டார்கள் என்று எவரும் எதிர்பார்க்கலாம்.

அத்துடன், டில்லி எசமானர்கள் ஒன்றுகூற, சென்னையிலுள்ளவர்கள் வேறொன்று கூறுவது நல்ல அரசியலுக்கு உகந்ததாகுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

'திராவிட நாடு கோரிக்கை அற்பக் கூச்சல் அல்ல'

'உருவான அரசியல் கட்சியின் தீவிரமான இலட்சியம்'

தி. மு. கழகத்திடம் 'சமரசம்' கோரியது ஏன்?

வடநாட்டு ஆங்கில இதழ் ஓலம்

திராவிட நாடு கோரிக்கையை நாம் பத்தாண்டுக் காலத்திற்கு ஒத்திவைக்க வேண்டும் என்று 'சமரசம்' கோரினார் அல்லவா, நமது மாநில நிதியமைச்சர் சட்டசபையில்! அவர் அப்படி 'சமரசம்' கோரியதுபற்றிக் கண்டித்து, 'திராவிட நாடு' கோரிக்கை ஆபத்தானது என்று ஓலமிட்டு, 'ஆபத்தான இடம்' என்ற தலைப்பில், 'அமிர்தபஜார் பத்திரிகா' என்ற வடநாட்டு ஆங்கில இதழ் எழுதியுள்ள தலையங்கத்தின் மொழிபெயர்ப்பைக் கீழே தருகிறோம்:—

"சம்யுக்த மராட்டியம் வேண்டும் என்ற கோரிக்கை, சில செல்வாக்கு மிகுந்த அரசியல் வட்டாரங்களில், பிளவு மனப்பான்மை கொண்ட இயக்கமாகக் கருதப்பட்டது.

"குசராத்தி மொழி மாநிலம் வேண்டும் எனக் குரல் கொடுத்தோர், இந்தியாவைத் துண்டாட விரும்புகிறார்கள் என்று, வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டப்பட்டனர்.

"இருமொழி பம்பாய் மாநில ஏற்பாட்டிற்கு உடன்பட மறுப்பவர்கள், மக்கள்சபையின் சுதந்திரத்தைக் சேவி செய்கிறார்கள் — அறைகூவுகிறார்கள் என்று நமக்குச் சொல்லப்பட்டது.

"செரிகேலா மற்றும் கார்ஸ்வான் பகுதிகளைக் கேட்ட ஒரிசாவின் கோரிக்கையை, 'தேச விரோதக் கூச்சல்' என்று சில அரசியல்வாதிகள் இழிமொழி பேசினார்கள்.

"ஆனால், தமிழக அரசியல் வாதிகளில் ஒருசாரார், 'வடநாட்டிலிருந்து தென்னாடு பிரிந்து போகவே வேண்டும்' என்று தொடர்ந்து கிளர்ச்சி செய்துவருவதை, இப்போதுகூட டில்லி அலட்சியப்படுத்திவருகிறது.

"இந்தியாவில், இரண்டாவது பிரிவினைகோரும் இந்த ஆபத்தான கோரிக்கையை எழுப்புகிறவர்களையும், தலைவர்களையும் கண்டிக்க வேண்டும் என்று எவருக்கும் தோன்றவில்லை.

"சூலை 5-ந் தேதியன்று சென்னை சட்டசபையில், வரவு - செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது நிதிமந்திரிசுப்பிரமணியம், தி. மு. க. எதிர்க்கட்சியினரை, தென்னாட்டிற்கு என்று ஒரு தனி அரசு வேண்டும் என்ற கோரிக்கையை ஒரு பத்து ஆண்டுக்காலத்திற்கு எழுப்பாதீர்கள்' என்று 'சமரசம்' கோரினார்.

"இது ஒரு, பொறுப்பற்ற—அலட்சியப்படுத்தக்கூடிய — எண்ணிக்கையில் சொற்பமான சில கிளர்ச்சிக்காரர்கள் எழுப்பும் அற்பக் கூச்சல் அல்ல; மாறாக அது, முறையாக வளர்ந்துள்ள ஒரு அரசியல் கட்சி நடத்துகிற ஒரு தீவிரமான அரசியல் இயக்கமாகும்; இதனை, ஒரு பொறுப்புள்ள மந்திரி, இந்தக் கிளர்ச்சி குறித்து அரசாங்க ரீதியான கவனம் செலுத்தியாக வேண்டும் என்று கருதியிருக்கிறார் என்ற உண்மையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

"மேலும், இந்தக் கிளர்ச்சியை நிதி மந்திரி கண்டிக்கவில்லை; ஒரு 'பத்தாண்டு சமரசம்' தான் கோரியிருக்கிறார்.

"இப்படி, 'பத்தாண்டு சமரசம்' என்ற நாகரிகமான வேண்டுகோள்கூட, குறுகிய மாகாணப் பொருளாதார நலனைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

"தேசிய ஒற்றுமை என்ற உயர்ந்த இலட்சியத்தை வற்புறுத்தி, திரு. சுப்பிரமணியம், பிரச்சினையை ஒரு உயர்ந்த அரசியல், மற்றும் ஒழுங்கு நிலைக்கும் உயர்த்தவில்லை. வேலை வாய்ப்புகளைப் பெருக்குவது, மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்ற இரு நோக்கங்களின்படியும், சென்னை ராஜ்யத்தில் கனரகத் தொழில்கள் நிறுவப்படவேண்டும் என்பதை வற்புறுத்திய அவர், அன்னிய மூலதனம் இன்றி தொழில் மயமாக்கும் வேலையைத் தொடர்ந்து நடத்தமுடியாது என்பதையும் சுட்டிக்காட்டினார். அன்னிய மூலதனம் பெறுவதற்கு, 'தமிழ் நாடு தனி நாடாக வேண்டும் என்று கோருவது வழியல்ல,' என்றும் தி. மு. கழகத்தை அவர் எச்சரித்திருக்கிறார்; எனவேதான், 'பத்து ஆண்டுக் கால சமரசம்' வேண்டும் என்று கோரியிருக்கிறார்.

"திரு. சுப்பிரமணியம் சாதுர்யமாகத்தான் வாதாடியிருக்கிறார்; ஆனால், அந்த வாதத்தில் விவேகம் இல்லை. ஒரு உருவான அரசியல் கட்சியின் தலைமையில் நடைபெறும் பிரிவினை இயக்கம் வலுப்பெற்று வரும் ஒரு மாநிலத்திற்கு, அன்னிய மூலதனம் கிடைக்காது என்பதை அவர் உணர்ந்திருக்கிறார்.

"அதேபோது, அந்த இயக்கத்தின் கர்த்தாக்களும் தன்னைப போலவே, 'மாநிலம் தொழில் மயமாகவேண்டும,' என்பதில் அக்கறை கொண்டவர்கள் என்பதையும் உணர்ந்திருக்கிறார். எனவே, அவர் (நிதி மந்திரி) உடனடியான பொருளாதார முன்னேற்றத்திற்காக ஏதாவது 'விலை' கொடுக்குமாறு கேட்டிருக்கிறார்; அதாவது அவர்கள் ஒரு பத்தாண்டுக் காலத்திற்கு தங்கள் இயக்கத்தை ஒத்திவைக்கட்டும்; தமிழ் நாட்டில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கனரகத் தொழில்களைத் துவங்கப் பெறுவதற்கான சர்க்கார் முயற்சிக்கு ஒத்துழைக்கட்டும் என்று கேட்டிருக்கிறார்.

"பத்தாண்டுகளுக்குப் பிறகு என்ன நிகழும்? இந்தச் சந்தர்ப்பத்தில், 'சமரசம்' என்ற சொல் முழுவதும் அர்த்தமற்றது அல்ல என்றால், தொழில்மயமான தமிழ் நாட்டில், தனி நாடு கிளர்ச்சி புதிதாகத் துவங்கும்.

"ஒரு அத்தியாவசியமான பொருளாதாரத் திட்டத்தை இடையூறு இன்றி நிறைவேற்றுவதற்காக, ஒரு இடைக் காலம்—'சிறிது நாள் ஓய்வு' வேண்டும் என்று அமைச்சர் அக்கறைகாட்டியிருக்கிறார், என்பதில் சந்தேகமில்லை. இந்தத் தீய நாளை ஒத்திவைப்பதில் உள்ள கேட்டினை அவர் முழுவதும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

"இக்கட்டிற்கு ஆளாகிவிட்ட நிலையில் அந்த நிதிமந்திரி, 'இந்த சமரச காலத்தில் இந்த இயக்கம் வலுவிழந்துவிடும்; கவனிப்பாரற்றுப் போய்விடும்; பொருளாதாரத் திட்டங்களின் மூலமாக மலரும் வளமான புதிய இந்தியாவில், பிரதேச, மாகாண வெறிகொண்ட உணர்ச்சிகள் முக்கியத்துவம் இழந்துவிடும்' என்று நம்பியிருக்கலாம். என்றாலும், 'பழமொழிப் பூனைபோல, ஒவ்வொரு பிரிவினை இயக்கத்திற்கும் ஒன்பது உயிர்கள் உண்டு' என்று சரித்திரம் நமக்குப் போதிக்கிறது. சௌத்ரி முகம்மது அலி, முதல் முதலில் 'இந்தியாவில் முஸ்லீம்களுக்கு என்று ஒரு தனிநாடு வேண்டும்' என்ற கொள்கையை வெளியிட்டபோது, ஜின்னா உள்ளிட்ட அனைவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். 'பாகிஸ்தான் வேண்டும்' என்ற லாகூர் தீர்மானம், 'அரசியல் அபத்தம்' என்று அலட்சியப்படுத்தப்பட்டது. என்றாலும், ஏழாண்டுகளுக்குள் பாகிஸ்தான் ஒரு உண்மையாகிவிட்டது.

"இதுபோன்று உவமை கூறுவது, வழக்கமாக தவறாகவே முடிகின்றன; என்றாலும், கடந்த காலததிய முஸ்லீம் வகுப்புவாதிகளுக்கும, இன்றையத் திராவிட பிரதேச வெறியர்களுக்கும் உள்ள ஒருமைப்பாடுகளை நாம் கவனிககாமலிருக்க முடியாது. பொறாமை, வெறுப்பு, பிரதேச சுயநலம், வெளிபபடையான சரித்திரப் புரட்டு—இவைதான், தேசிய ஒற்றுமையைக் குலைக்கிற எல்லா இயக்கங்களுடையவும் பிரதான சாயல்களாகும்.

"தென்னாட்டில் இன்று அவசரமாகத் தேவைப்படுவது, சமரசம் வேண்டும் என்ற மன்னிப்புக் கோருவது போன்ற — கண்டிபபில்லாத சாதாரண வேண்டுகோள் அல்ல; மாறாக நமது கலாச்சாரம், நாகரிகம் இவற்றின் சாரமான ஒற்றுமை என்ற இலட்சியத்தை தீவிரமாக வற்புறுத்துவதுதான். இது போன்ற பிரச்சினைகளில் சமரசத்திற்கு இடமே கிடையாது"

பிறந்த நாட்டிலேயே சித்தவைத்தியம் இறந்துவிடக் கூடாது

புத்துயிரூட்டிப் புதுப்பிக்க அரசாங்கத்தார் முன்வர வேண்டும்

சட்டசபையில் க. அன்பழகன் வேண்டுகோள்

சென்னை, ஜூலை 22—

சென்னை சட்ட மன்றத்தில் மருத்துவ, சுகாதார மானியத்தின் மீது கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணை மீது தோழர் க. அன்பழகன் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"இந்த அரசாங்கம் சுகாதாரம், மருத்துவம் ஆகிய துறைகளில் பல திட்டங்களை நிறைவேற்றி வந்தபோதிலும், இன்றைக்கு நாட்டில் உள்ள ஏழ்மை நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்தால், அதன் காரணமாகப் பெரும்பாலான மக்கள் காற்றில்லாத வீடுகளில் குடியிருப்பதும், குடிப்பதற்குத் தகுதியில்லாத நீரைப் பருகுவதும், உறங்குவதற்கு இலாயக்கற்ற இடங்களில் உறங்குவதும், அளவுக்கு மீறிய கூட்டங்களாக வாழ்வதும், அதன் காரணமாக அவர்கள் பல நோய்களுக்கு ஆளாவதுமான துர்ப்பாக்கிய நிலைமை இந்தப் பாரதப் புண்ணிய பூமியில் உருவாகியிருப்பதைக் காணலாம்.

"உண்மையாகவே நாட்டு மக்களில் கிராமங்களில் வாழ்பவர்களுக்குத் தேவையான வைத்திய வசதியைப் பெற முடியவில்லை. நகரங்களில் வாழும் மக்கள் வைத்திய வசதி இல்லாமல் ஒருநாள் பொழுதைக்கூட கழிக்க முடியவில்லை. கிராமங்களில் ஆஸ்பத்திரிகளையே காணமுடியாத நிலைமையில் மக்கள் இருக்கிறார்கள். நகரங்களில் மக்கள் மருத்துவமனைகளுக்குச் சென்று இடம் கிடைக்காத நிலைமையில் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் குறைகள் எவ்வாறு ஏற்பட்டன என்பது பற்றிச் சிந்தித்து அவைகளை நீக்குவதற்கான திட்டத்தை உருவாக்கவேண்டும்.

"டாக்டர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகள், தாதிமார் இல்லாத டாக்டர்கள், மருந்து இல்லாத சீசாக்கள், மருந்தை வாங்க முடியாத நோயாளிகள், தண்ணீர் கலந்த மருந்தைப் பெற்றுத் தவிக்கும் நோயாளிகள், ஏழைகளை டாக்டர்கள் பாராமலும் செல்வந்தர்களிடம் அதிக அக்கறை காட்டுவதுமான நிலைமை இருப்பது மிகவும் அநீதியாகும்; இந்த நிலை மாற வேண்டும்.

"பணக்காரர்கள் பண வசதியைக் கொண்டு எப்படியும் வைத்தியம் செய்துகொள்ள முடியும்; ஏழைகளை அரசாங்கம்தான் கவனிக்க வேண்டும். அயல் நாடுகளுக்குச் சென்றும்கூட பணக்காரர்கள் வைத்தியம் செய்து கொள்ள முடியும்.

"இந்த அரசாங்கம், 'தமிழ் நாடு' என்ற பெயர் வைக்கத் தயங்கினாலும், செய்ய வேண்டிய சிறப்பான கடமை ஒன்று உண்டு; அதாவது, தமிழ் நாட்டின் சிறந்த வைத்திய முறையான சித்த வைத்திய முறையை வளர்க்க வேண்டும். தமிழ் நாட்டுக்குரிய வைத்தியம் சித்த வைத்தியம்தான். யுனானி வைத்தியம் இஸ்லாமிய கலாச்சாரத்தோடு சேர்ந்தது. ஆயுர்வேதம் ஆரியர்களது வைத்தியம். ஓமியோபதி ஜெர்மானிய நிபுணரின் அறிவுத் திறமையால் உண்டானது. அலோபதி வைத்திய முறை ஆங்கில நாட்டுடன் தொடர்புள்ளது. சித்த வைத்தியம் பெருமையளிக்கும் மருத்துவம்!

"தமிழ் நாட்டில் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டதுதான் சித்தமருத்துவம்; திருவள்ளுவரால் போற்றப்பட்டு, திருமூலரால் வரையறுக்கப்பட்டது சித்த வைத்தியம் இன்று அதை வளர்ப்பதற்கான முயற்சி அடியோடு கைவிடப்பட்டிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

"சென்னையில் உள்ள இந்திய வைத்தியக் கல்லூரி 1927-ம் ஆண்டில் பானகல் அரசர் இந்த மாநிலத்தின் முதல் மந்திரியாக இருந்த காலத்தில் அவருடைய ஆர்வத்தினால் ஏற்பட்டது. அவர், 'வெள்ளையர்களின் வைத்தியமான அலோபதி வைத்தியத்திற்கு நாம் இரையாகக் கூடாது; நமது நாட்டுக்கு உரிய தனி மருத்துவம் ஒன்று இருக்கத்தான் செய்கிறது; அது வளர்ந்தே தீரவேண்டும்' என்ற ஆர்வத்தினால், திரு. உஸ்மான் தலைமையில் குழு ஒன்றை நியமித்து அதன் மூலம், 'சித்த வைத்தியம் ஓர் சிறப்பான வைத்திய முறை' என்பதை எடுத்துக்காட்டி, அதற்குப் பின்னர் இந்திய மருத்துவக் கல்லூரியையும் ஏற்படுத்தினர். ஆனால் இன்றைய அரசாங்கத்தார், இந்திய வைத்தியக் கல்லூரியை மேல்நாட்டு வைத்தியம் கலந்த ஓர் கல்லூரியாக மாற்றியுள்ளனர். அப்படி மாற்றவேண்டிய காரணங்கள் பல இருக்கலாம். அந்தக் கல்லூரி எந்த அடிப்படை நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதோ, அது சிதைக்கப்பட்டுள்ளது என்று இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"சித்த வைத்தியம், பிறந்த நாட்டில் செத்துக்கொண்டிருக்கிறது; அதற்கு உயிரூட்ட வேண்டும்; அதைப் பேணி வளர்ப்பதற்கான வழிவகைகள் காணுவதற்கு ஆராய்ச்சிகள் நடத்தவேண்டும் அதற்காக ஒரு தனிப்பட்ட சித்த மருத்துவர் குழு(போர்டு) அமைக்கப்பட்டு, நம் நாட்டுக்குரிய சித்த வைத்தியத்திலுள்ள சிறப்புகளும் நுணுக்கங்களும் நிலைநாட்டப்படவேண்டும்.

"தமிழ் நாட்டிலுள்ள ஆட்சியாளர்கள் சித்த வைத்தியத்தின் தனிச் சிறப்பை நிலைநாட்டத் தவறிவிட்டதன் விளைவாக, 'எத்தனையோ சித்த வைத்திய நுணுக்கங்கள்' என்று நாட்டு மக்கள் பலரால் பேசப்பட்டும், கருதப்பட்டும் வருகின்றன.

"தமிழர்களுடைய பல தனிப் பண்புகளும், அருஞ் செயல்களும், கவின் கலைகளும் பிறருடையன என்று கருதப்பட்டு விடுகின்றன. அத்தகைய துர்ப்பாக்கிய நிலைமை தமிழ் வைத்திய முறைக்கும் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டுச் சித்தர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வைத்திய நுணுக்கங்கள் ஆயுர்வேதத்தில் சேர்க்கப்பட்டு, அம் மருந்துகளுக்கு உரிய தனி சித்த வைத்திய முறையும், தனிப் பெயரும் மறைக்கப்பட்டிருக்கின்றன.

"இறந்து கொண்டிருக்கும் சித்த வைத்தியத்திற்கு உயிரூட்டி அதை நன்றாக வளர்ப்பதற்கான ஆலோசனைகள் கூறக்கூடிய ஒரு தனிக் குழுவை அரசாங்கத்தார் அமைக்கவேண்டும். நான் இந்தக் காரியத்தைத் தமிழ்நாட்டு அரசாங்கத்தார் செய்யவேண்டும் என்று சொல்வதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டின் பெருமையை உயர்த்தக் கடமைப்பட்டிருக்கும் இந்த அரசாங்கத்தார், தமிழர்களின் பெருமைக்குரிய சித்த வைத்திய முறையை நிலைநாட்டுவது அவர்கள் கடமை என்பது முதல் காரணம். கிராமங்களிலுள்ள மக்கள் சித்த வைத்திய முறைகளை எளிதில் கையாண்டு அவ்வப்போது சிறந்த மருந்துகளைத் தயாரித்துக் கொண்டு நல்ல பலன் அடைய முடியும் என்பது இரண்டாவது காரணம். அரசாங்கம் இந்த நல்ல காரியத்தை உடனடியாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"சித்தர்கள் தயாரித்துள்ள வைத்திய சம்பந்தமான ஏடுகளைத் தேடியெடுத்து அவைகளில் எழுதப்பட்டுள்ள வைத்திய நுணுக்கங்களை ஆராய்ந்தறியும் வேலையில் மருத்துவப் புலவர் திரு. குமாரகுரு செட்டியார் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்ட பிறகு அந்த வேலையும் கைவிடப்பட்டது. அவர் இப்போது இருக்கிறாரா, இல்லையா என்பதும் எனக்குத் தெரியாது

"அதேபோல, டாக்டர் திரு. குருசுவாமி முதலியார் அவர்களுடைய ஆர்வத்தின் விளைவாக 'கிராம வைத்தியர் தகுதிப் பயிற்சி' என்ற ஒரு பயிற்சி, சித்த வைத்திய முறையில் பல பேர்களுக்குக் கொடுக்கப்பட்டுவந்தது. அதுவும் இப்போது கைவிடப்பட்டிருக்கிறது.

"College of Integrated Medicines-ல் இன்றுள்ள நிலைமையில் சித்த வைத்தியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முடியாவிட்டாலும், தமிழர்களுடைய வைத்தியக் கலை என்ற அடிப்படையில் சித்த வைத்தியத்தை வேறு ஆராய்ச்சி நிலையம் அமைத்து பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"அடுத்தபடியாக, இந்திய மருத்துவக் கல்லூரியைச் சட்டபூர்வமாக College of Integrated Medicines ஆக மாற்றியிருக்கும் அரசாங்கத்தார், சட்டத்தை நிறைவேற்றுவதில் தவறியிருக்கிறார்கள். காரணம், அப்படிச் சட்டமியற்றப்பட்ட பிறகு அதற்கேற்றபடி கல்லூரியில் போராசிரியர்கள் நியமிக்கப்படவில்லை; மற்ற அவசியமான ஏற்பாடுகளும் நிறைவேற்றப்படவில்லை. அங்கே சொல்லிக் கொடுக்க வேண்டியவற்றைப் பயிற்றுவிக்கக்கூடிய, வைத்தியத்தில் நிறைந்த அனுபவ அறிவு பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்ற வேண்டுகோள் அம்மாணவர்களால் பலமுறை கோரப்பட்டிருந்த போதிலும்—சுகுந்த தலைவர்களை அணுகி கோரிக்கையை தெரிவித்திருந்த போதிலும், இதுவரை அந்த வேண்டுகோள் நிறைவேற்றப்படவில்லை.

"College of Integrated Medicines என்ற பெயருக்கு ஏற்றபடி அங்கே சொல்லிக் கொடுக்கவேண்டிய வைத்தியப் பாடங்களை நன்றாகச் சொல்லிக் கொடுக்கக்கூடிய கற்றறிந்த போராசிரியர்கள் அங்கே நியமிக்கப்படவில்லை. அங்கே படிக்கும் மாணவர்கள் இப்போது ரூ. 200 Tution Fees ஆண்டுக்கட்டணமாகச் செலுத்தி வருகின்றனர். நல்ல போராசிரியர்களை நியமித்தால் அந்த மாணவர்கள் ரூ. 240 ஆண்டுக் கட்டணம் செலுத்தவும் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதெல்லாம் 'நாங்கள் ரூ. 240 வேண்டுமானாலும் கட்டத் தயாராயிருக்கிறோம்; எங்களுக்கு நல்ல போராசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும்; வைத்தியத்தில் நுண்ணறிவு படைத்த—அநுபவமிக்க போராசிரியர் ஒருவர் கல்லூரிக்குத் தலைவராக (Dean) வரவேண்டும்; இப்போது எங்கள் கல்லூரிக்கு மதிப்பில்லாததற்குக் காரணம், இக் கல்லூரியின் ஆசிரியப் பகுதிகளின் மதிப்பும், தகுதியும் குறைவாக இருப்பதுவே ஆகும்' என்பதுதான்.

"மேலும், இப்போது அந்தக் கல்லூரியில் படித்துத் தேர்ச்சி பெற்ற பிறகு உடனடியாக ரிஜிஸ்டர் (பதிவு) செய்துகொள்வதற்கு வகை செய்வதற்கான மருத்துவக் குழுவை நியமிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். சென்ற ஆண்டிலேயே அதற்கான சட்டம் இயற்றப்பட்டும் அப்படிப்பட்ட ஒரு குழு இன்னும் நியமிக்கப்படவில்லை. அது எப்போது நியமிக்கப்படும் என்றும் தெரியவில்லை. அந்தக் குழுவை உடனடியாக நியமிக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

"இறுதியாக, நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டு மக்களின் ஏழ்மை நிலையையும், எளிய வாழ்க்கைத் தரத்தையும் மனதில் கொண்டு பார்க்கும்போது, ஹோமியோபதி மருத்துவம் அவர்களுக்கு குறைந்த செலவில் சிறந்த பலனளிக்கக்கூடிய வைத்தியமாக இருக்கிறது என்பது தெரிகிறது. வேறு வைத்தியங்களால் தீராத பல நோய்கள் சித்த வைத்தியத்தால் தீருவதுபோல ஹோமியோபதியாலும் தீருகின்றன. ஆகவே, தக்கவாறு ஆராய்ந்து பார்த்து ஹோமியோபதியை அபிவிருத்தி செய்து, அதை கிராமம் கிராமமாகப் பரப்பவேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறேன்.

"நான் கூறிய இந்தக் காரியங்களையெல்லாம் நிறைவேற்றி வைத்தியத் துறையிலுள்ள குறைகளை நீக்கினால்தான் அரசாங்கத்தின் சுகாதார வைத்திய இலாகாவிற்கு வந்திருக்கும் நோயும் நீங்கும்."

திண்டிவனத்தில் அண்ணா

நகர சபை நடத்திய சிறப்பான வரவேற்பு விழா

பல்லாயிரம் மக்களிடை இலட்சிய விளக்கம்

திண்டிவனம், ஜூலை 20—

14—7—57 மாலை 7 மணிக்கு திண்டிவனம் தி. மு. கழகத்தின் சார்பில் அண்ணா அவர்களுக்கு வெகு சிறப்பான முறையில் பாராட்டு அளிக்கப்பட்டது.

நகரம் முழுவதும் தோரணங்களாலும், வரவேற்பு வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

பொதுக்கூட்டத்தின் மேடை வாழைமரங்களாலும், தென்னங் குலைகளாலும், பலவண்ண மின்சார விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த காட்சி எவருடைய மனதையும் கவரும் வகையில் இருந்தது.

திண்டிவனம் நகரசபை வரவேற்பு முடிந்ததும் அண்ணா அவர்கள் பாராட்டுக் கூட்டத்திற்கு வந்தபொழுது கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும் ஆரவாரம் செய்து வரவேற்றனர் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

கூட்டம் துவங்குவதற்குமுன், தோழர் டேப்-இராதாமாணிக்கம் இயக்கப் பாடல்கள் பாடினார்.

தோழர்கள் ஆ. தங்கவேலு முன்மொழிய வ. இராமானுசம் வழிமொழிய தோழர் தி. க. குமாரசாமி கூட்டத்திற்குதலைமை ஏற்றார். அவர் தனது தலைமையுரையில், தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபட்ட அவசியத்தையும். கழகம் இதுவரை செய்துள்ள பணிகளை விளக்கியும், அண்ணா அவர்களைப் பாராட்டியும் பேசினார். பின்னர் ப. இராமானுசம் அவர்கள் அண்ணா அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்த பிறகு, அண்ணா அவர்களுக்கு ஏராளமான கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் பல நிறுவனங்கள் சார்பில் வழங்கப்பட்டன.

அடுத்து தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றிப் பேசினார்.

அடுத்து அண்ணா அவர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்தும், சட்டமன்றத்தில் அமைச்சர்கள் அளிக்கும் பதில்கள் பொருளற்ற முறையில் இருக்கிறதென்றும், ஆட்சியாளர்களின் இன்றையப் போக்கு, ஐந்து வயது பாலகனைப் பார்த்து ஐம்பது வயதுடைய ஆள், 'அடே! உன்னால் என்னைப் போல் மீசையை முறுக்கிவிட முடியுமா?' என்று கேட்பது போல் இருக்கிறது—இன்று ஆட்சியாளர்கள் தி. மு. கழகத்தைப் பார்த்துக் கேட்பது என்றும், நாங்கள் சட்டமன்றத்தில் மக்களின் நலனுக்காக வாதாட என்றும் தயங்கமாட்டோம் என்றும், டெல்லி ஏகாதிபத்தியப் பிடிப்பினின்றும் திராவிடநாடு பிரிந்து சுதந்திரமாக வாழ வேண்டுமென்று கூறினார்.

தோழர் எஸ். பக்கிரிசாமி நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

★

திண்டிவனம்

நகர மன்ற வரவேற்பு

14—7—57 மாலை 6 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நகர சபைத் தலைவர் திரு. வி. கோபாலக் கவுண்டர் அவர்களின் தலைமையில் அண்ணா அவர்களுக்கு ஓர் வரவேற்பு இதழ் தலைவர் அவர்களால் வாசித்தளிக்கப்பட்டது; இவ்விழாவில் அதிகாரிகளும், பொதுமக்களும், நகரப் பிரமுகர்களும், நகர மன்ற உறுப்பினர்களும் திரளாகக் கூடியிருந்தனர்.

அண்ணா அவர்கள் வரவேற்பிற்கு நன்றி தெரிவிக்கும் முறையில், நகர சபைகள் நல்லமுறையில் நடக்கவேண்டுமானால் அரசாங்கம் அவைகளுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கவேண்டுமென்றும், ஆனால் தற்போதைய அரசாங்கம் கொடுமைக்கார மாமியார் போன்றும், நகரசபைகள் மருமகள் நிலையிலும் இருக்கின்றன என்றும், மேல் நாடுகளில் இத்தகைய நிலை இல்லாமையால்தான் அவை நல்ல முறையில் இயங்குகின்றன என்றும், சட்ட மன்ற உறுப்பினர்களைவிட நகர மன்ற உறுப்பினர்கள் மக்களிடம் தொடர்பு அதிகம் கொண்டவர்கள் என்றும், அதனால் அவர்களால்தான் மக்களுக்குத் தேவையான சௌகரியங்களைச் செய்து கொடுக்க முடியுமென்றும், மற்றும் பல கருத்துக்களையும் எடுத்துக் கூறினார்.

பின்னர், நகர மன்ற துணைத் தலைவர் திரு. கு. வைத்திலிங்கம் அவர்கள் நன்றி நவிலக் கூட்டம் முடிவுற்றது.

இறுதியில் அண்ணா அவர்களுக்கு ஓர் தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது.

இந்தியைப் பரப்ப டில்லியின் திட்டம்

இந்தி பேசப்படாத பிரதேசங்களில் இந்தியைப் பரப்புவதற்காக மாநில சர்க்கார்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு 1957—58-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியைப் பரப்புவதற்காகவும், அபிவிருத்தி செய்வதற்காகவும் பாடுபட்டுவரும் இந்தி நிறுவனங்களுக்கு, இதற்கென மொத்தமாக ஒதுக்கப்பட்டுள்ள தொகையாகிய ரூ. 7,61,000-த்திலிருந்து மானியங்கள் தரப்படுமாம்.

செலவிடுவது கோடியானாலும் பலன் என்ன?

தாழ்த்தப்பட்டோர் முன்னேற புரட்சிகர திட்டங்கள் இல்லையே!

காங்கிரசுக்கு முன்பே தீண்டாமை ஒழிய பாடுபட்டோர் பலர் உண்டு

சட்டசபையில் அண்ணா கருத்துரை

சென்னை சட்டசபையில், அரிசன முன்னேற்றத்திற்காகக் கோரப்பட்ட மானியக் கோரிக்கையின்மீது பிரரேபிக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து அண்ணா அவர்கள் ஆற்றிய கருத்துரையின் முழு விவரம் இங்கு தரப்படுகிறது:—

“அரிசன முன்னேற்றத்திற்காகக் கோரப்பட்டிருக்கிற மானியத்திற்குப் பிரரேபிக்கப்பட்டுள்ள ஒரு வெட்டுப் பிரேரணையை நான் ஆதரித்துப் பேச முன்வந்த காரணத்தால் இதுவரை ஆட்சியாளர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற நல்ல முயற்சிக்கு இடையூறு, உற்சாகத்திற்குக் குறைவு ஏற்பட்டு விடக்கூடாதென்பதை முன்கூட்டியே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

“இரண்டாவதாக, இந்த நல்ல அரிசன முன்னேற்றத்தை நடத்துவதற்கு இப்போதுள்ள அமைச்சரைவிடத் தகுதியானவர்கள் அந்தக் கட்சியிலேயே வேறு ஒருவர் இருக்கிறார் என்கிற நம்பிக்கையின்பேரிலோ, அல்லது எங்கள் கட்சியிலேயே உடனடியாக ஆட்சியை எடுத்து நடத்தக் கூடியவர் இருக்கிறார் என்கிற நம்பிக்கையின் பேரிலோ அதிலுள்ள குற்றங் குறைகளை எடுத்துச் சொல்ல நான் முன்வரவில்லை.

“அரிசன முன்னேற்றம் என்பது தேசியப் பிரச்சினை என்கிற விஷயத்தை, அரிசனங்கள் என்கிற தாழ்த்தப்பட்ட மக்கள்—ஒடுக்கப்பட்ட பெருங்குடி மக்கள் யாரால் தாழ்த்தப்பட்டார்கள், யாரால் ஒடுக்கப்பட்டார்கள், அவர்களை தாழ்த்தி ஒடுக்கியவர்கள் யார் என்று அலசிப் பார்க்கிற நேரத்தில், ஒவ்வொரு காலத்தில் ‘நாம் எல்லோருமே அந்தப் பெருங் குற்றத்தைப் புரிந்தவர்களாக இருக்கிறோம்’, என்கிற மனச்சாட்சி உறுத்தல் எல்லா சமூகத்தினருக்கும் ஏற்படும். ஆகவே, அந்தப் பெருங் குற்றத்திற்கு, அநீதிக்குக் கழுவாய் தேடுகிற வகையில்—பரிகாரம் தேடுகிற வகையில் எல்லா சமூகத்தினரும் தமது தமது சொந்தப் பிரச்சினையாக அரிசன முன்னேற்றப் பிரச்சினையைக் கவனித்தாக வேண்டும்.

“அந்த வகையில் நானும், என்னைச் சார்ந்த கட்சியினரும், ‘காங்கிரஸ் கட்சியார் இதில் சாதித்திருப்பதைவிட மற்றவர்கள் சாதித்திருக்கிறார்கள்-சாதிக்க முடியும்’ என்று எடுத்துச் சொல்லுகிற நேரத்தில், ‘எங்களைத் தவிர இதர கட்சியினர் என்ன என்ன சாதித்தார்கள்?’ என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்ல ‘இப்படியாக விவாதத்தில் இறங்கி விடுகிறோமே,’ என்று வருத்தப்படுகிறேன்.

“இந்த விவாதத்திற்கு இரண்டு காரணங்கள் உண்டு; ஒன்று—காங்கிரஸ் உறுப்பினர்களாக இருக்கிற பலர், இன்றைக்கு எதிர் தரப்பில் உட்கார்ந்து கொண்டு நாங்கள் சொன்னவற்றையே இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகச் சொல்லி வந்தார்கள்; அவர்களை எல்லாம் அந்தப் பக்கத்திலே இழுத்துப் போட்டுக் கொள்ளும் சக்தி படைத்த கட்சியார், நாளைக்கு, இந்தத் தரப்பில் இருக்கக் கூடிய சில பேர்களையும் அந்தப் பக்கத்தில் இழுத்துக் கொள்ளுகிற சக்தியை அபாரமாகப் படைத்திருக்கிறார்கள். ஆகவே, இது கட்சிப் பிரச்சினை அல்ல—சக்திப் பிரச்சினையும் அல்ல என்பது உணர்ந்தே நாங்கள், நாட்டைப் பீடித்துக் கொண்டிருக்கிற ஒரு கேட்டைத் தீர்ப்பதற்காகத்தான் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளுகிறோம்.

“நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு கோடியே 94 இலட்சம் ரூபாயை அரிசன முன்னேற்றத்திற்குச் செலவிடுவதற்காகக் கோரியிருக்கிறார்கள்; அது வரவேற்கத்தக்க தொகைதான். அதற்கு முன்னால் ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய்தான் செலவழித்தார்கள் என்றும், இப்போது கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கி இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். நான் மிகவும் மகிழ்ச்சியோடு அந்தக் குறிப்பேட்டை வாங்கிக் கொண்ட நேரத்தில் எனக்குச் சோகம் தருகிற ஒரு இடம் கண்ணில்பட்டு விட்டது; அங்கே

‘The increase in the Budget Estimate (Revised) for 1957-58 is mainly due to the provision made for schemes included in the Five-Year Plan relating to the removal of untouchability, Welfare of Scheduled Tribes and scheduled areas ex-criminal tribes and backward classes.’

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

“ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் செய்யப்பட இருக்கிற பல காரியங்களுக்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர, சென்ற ஆண்டு செய்யப்பட்ட காரியங்களைவிட இவ்வாண்டு அதிகப்படியான காரியங்களைச் செய்வதற்கு செலவழிக்கப்பட அல்ல என்று உணருகிறேன்.

“மற்றொன்றையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்—‘இவ்வாண்டு 1 கோடியே 94 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்; சென்ற ஆண்டைவிட 30 இலட்சம் அதிகமாக இவ்வாண்டு செலவிடப் போகிறோம்’ என்றெல்லாம் சொல்லும்போது, உண்மையிலேயே சென்ற ஆண்டு செய்யப்பட்டுள்ள காரியங்களைவிட அதிகமான காரியங்களை இவ்வாண்டு இந்த சர்க்கார் செய்யப் போகிறார்கள் என்கிற எண்ணம் உண்டாகிவிட்டால் அது தவறாகக்கூட இருக்கும்; காரணம், சென்ற ஆண்டு இருந்த வாழ்க்கைத்தரத்தைவிட இவ்வாண்டு வாழ்க்கைத்தரம் கடுமையாகப் போனதற்குக் காரணம், விலைவாசிகள் உயர்ந்துவிட்டன; ஒரு கோடி ரூபாயில் சென்ற ஆண்டில் என்ன என்ன காரியங்களைச் செய்தோமோ அதே காரியங்களை செய்வதற்கு இவ்வாண்டு 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவழித்தாகவேண்டும்’ என்று பொருளாதார நிபுணர்கள் எல்லாம் வற்புறுத்துகிறார்கள்.

“ஆகவே, நாமும் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு 30 இலட்சம் ரூபாய் அதிகமாகவே அரிசன முன்னேற்றத்திற்காகச் செலவழிக்கப் போகிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்ளவோ, மகிழ்ச்சி அடையவோ அவசியமில்லை. அந்தச் சமுதாயத்தைத் திருத்தி அமைப்பதிலோ, வளர்ச்சியடையச் செய்வதிலோ, நாம் இன்னும் என்ன என்ன புதிய காரியங்களைச் செய்யப்போகிறோம் என்று கணக்கு எடுத்துக் கொள்வதே உண்மையில் பெருமைக்கு உரியதாகும்.

“அப்படிப் பார்க்கிற காலத்தில், நாட்டுக்குச் சுதந்திரம் வந்து 10 ஆண்டுகள் கழிந்துவிட்ட பின்னரும் அவர்களுடைய முன்னேற்றத் துறையில் பெருமைப்படத்தக்க மாறுதல்கள் இல்லை என்பதை எல்லாக் கட்சியினரும் உணருவார்கள்.

ஓரளவுக்கு முன்னேற்றம் உண்டு; இந்தப் பேரவையிலும் கூட அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள்—நல்ல ஆர்வமுடைய இளைஞர்கள், உரிமைக் குரலை எழுப்பக் கூடியவர்கள், உள்ளுணர்ச்சி நிறைந்தவர்கள் — ஏராளமாக இருப்பதும், தங்கள் சமூக உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள அவ்வப்போது விழிப்போடு செயலாற்றுவதும் நாம் செலவழிக்கும் ரூ. 1 கோடி நாட்டுக்கு நல்ல பலன் அளித்திருக்கிறது என்றே நான் கருதுகிறேன்.

“பொதுத் தொகுதி முறையில், சமுதாயத்திலுள்ள மக்கள் ஆற்றலும் அறிவும் படைத்து ஏராளமாக மீண்டும் மீண்டும் இங்கு வரவேண்டுமானால் அவர்களின் வாழ்க்கைத்தரம் நன்றாக உயர்த்தப்பட வேண்டும்.

“இந்தத் தலைமுறைதான் கடைசி அரிசன தலைமுறை; ‘அரிசனம்—பிறசனம்’ என்று இருக்கிறதே சமுதாய அமைப்பை இந்தத் தலைமுறையோடு தீர்த்துக்கட்டிவிடுவதற்கு ஏதாவது ஒரு தீவிரமான நடவடிக்கையை உண்மையிலேயே எடுத்தாலொழிய, உண்மையில் தனித் தொகுதி போய்விட்டால் — தனித் தொகுதி கைவிடப்பட்ட பிறகும் இத்தனை மக்கள் பொதுத் தொகுதியிலிருந்து இந்தப் பேரவைக்கு வருவார்களா என்பது ஐயுறுவதற்கு உரியதுதான்.

“இதை எடுத்துச்சொல்ல—ஒவ்வொரு கட்சியினரும் தங்கள் தங்கள் காலத்திலே செய்யப்பட்ட காரியங்களை எடுத்து விளக்கும் நேரத்தில் பலருக்கு வருத்தமாக இருந்தது.

“ஆனால் ஒன்று நான் சொல்லிக்கொள்வேன். இந்தக் காங்கிரஸ் சர்க்கார் — காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் அரிசனங்களைப் பற்றி கவனிக்க ஆரம்பித்தார்கள் என்று எடுத்துச் சொல்வது நம்முடைய மாநிலத்தின் அரசியல் வரலாற்றைக் கூர்ந்து பார்க்காத குறையின் குற்றமே என்று உணருகிறேன்.

“சர்க்கார் வெளியிட்டிருக்கிற அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது:—

‘Madras is one of the earliest Provinces to take up this question on Government level and as early as 1919 an effort was made to make an exhaustive enquiry into the conditions of the depressed and backward classes and the disabilities of improving their conditions. It was in that year that the Commissioner of labour was entrusted by the Government with the duty of the betterment of the conditions of the depressed and backward classes in the State.’

“ஆகையினால் இந்த சமூகத்தின் நிலையை மாற்ற வேண்டும் என்ற கருத்து 1919-லிருந்தே சர்க்கார் அளவுக்கு வந்து அதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. ‘அந்த முயற்சி எங்கே? இன்றைய தினம் எடுத்துக்கொள்கிற முயற்சிகள் எங்கே?’ என்று ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில் மலைக்கும் மடுவுக்கும் ஆக வித்தியாசம் இருப்பதை நான் அறிகிறேன்.

“ஆனால் அப்பொழுது வசூலிக்கப்பட்ட வரித் தொகையையும், இப்பொழுது வசூலிக்கப்பட்டுவரும் வரித் தொகையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அன்றைய நாட்டு நிலைமையையும், இன்றைய நாட்டு நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அன்றைக்கு என்ன என்ன காரியத்தைச் செய்திருக்கிறார்களோ அதே காரியங்களை இன்றைக்கு இருக்கிற வசதிக்கு ஏற்றபடி விரிவாக்கிக்கொண்டு இருக்கின்றோமே தவிர, புரட்சிகரமான மாறுதல் எதுவுமேயில்லை.

“அரிசன முன்னேற்றத்திற்கு என்று குறிப்பிட்டுக் கேட்கிற நேரத்தில் ‘அரிசன நலனுக்குச் செலவிட’ என்று கேட்பதைக் காட்டிலும், ‘அரிசனங்களுடைய நலனுக்காக இன்ன இன்ன காரியங்களைச்செய்திருக்கிறோம்; செய்யப் போகிறோம்’ என்பதாக ஆராய்ந்து அலசிக் காட்டி இருக்கலாம்.

“அரிசனங்கள் பெரும் பெரும் தொழில்களிலும், உயர்ந்த உத்தியோகங்களிலும் இருப்பதாகக் காட்டுகின்ற நேரத்தில் காங்கிரஸ் ஆட்சி ஏற்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே—காங்கிரஸ் ஆட்சி ஏற்படுமா என்று காங்கிரஸ்காரர்களே ஐயமுற்றுக் கொண்டிருந்த காலத்திற்கு முன்பே—காங்கிரஸ் கட்சி நாட்டை மீட்குமா என்று அரசியல் உலகத்தில் ஐயப்பாடு இருந்த போதே இதே மாநிலத்தில், தாழ்த்தப்பட்ட பெருங்குடி வகுப்பைச் சேர்ந்த எம். சி. இராசா அவர்கள் மந்திரியாகவும், திரு. சிவராஜ் என்ற பெருங்குடி மகன் சட்டக் கல்லூரி பேராசிரியராகவும், திரு. சிவசண்முகம் வேறு துறையில் நல்ல திறமை பெற்றவராகவும், அகில இந்தியாவுக்கும்—அகில இந்தியா என்ன—உலகம் முழுவதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் குறைபாடுகளை எடுத்துக்காட்டி, அமரரான டாக்டர் அம்பேத்கார் விளங்கி யிருப்பதையும் மறந்துவிடுவதற்கில்லை.

(அவரது பேச்சின் பிற்பகுதி நாளை வெளிவரும்)

கழகக் கூட்டம்

★

மேலூர் வட்டம்—
கொட்டக்குடி:

அண்ணா திடலில்
25—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: க. பி. அழகிரிசாமி
பேசுவோர்:
எஸ். எஸ். தென்னரசு
கே. எஸ். சந்தானம்
அசோகன்

குளித்தலைத் தொகுதியில் மு. கருணாநிதி

சுற்றுப் பயணம்

“தோழர் மு. கருணாநிதி எம். எல். ஏ. அவர்கள் குளித்தலைத் தொகுதியில் ஆகஸ்டு திங்கள் 5-ந் தேதி முதல் ஒரு வார காலம் தொகுதி முழுதும் சுற்றுப் பயணம் செய்து, நிலைமைகளை நேரில் அறியவும், கோரிக்கைகளைக் கவனிக்கவும் திட்டமிட்டுள்ளார். அது சமயம் பொதுக் கூட்டம் நடத்த விரும்பும் தோழர்கள் என்னிடத்தில் கடிதத் தொடர்பு வைத்துத் தெரிந்து ஏற்பாடு செய்ய வேண்டுமாய் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்” என்று குளித்தலை தி. மு. கழகச் செயலாளர் தி. வீ. முத்துக்கிருஷ்ணன் அவர்கள் அறிவிக்கிறார்.

தென் பகுதி இரயில்வே பகுத்தறிவாளர் மன்றம்

தென் பகுதி இரயில்வே பகுத்தறிவாளர் மன்ற முதலாண்டு பொதுக் குழு, சென்னை — சைதாப்பேட்டை ‘அன்னதான சமாஜத்’தில் காலை 9 மணிக்குக் கூடும்.

பொதுக் கூட்டம்

மாலை 6 மணிக்கு தியாகராய நகரில் தோழர் எஸ். இராகவானந்தம் அவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும்; கூட்டத்தில் அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர்கள் மு. கருணாநிதி, அவர்கள், ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ. ஆகியோரும் பேருரை நிகழ்த்துவர்.

(மேற்கண்ட இரு நிகழ்ச்சிகளும் நடைபெறும்! தேதி குறிப்பிடப் படவில்லை.)

சேரி ஒழிப்புத் திட்டம்

சென்னைக்கு ரூ. 82,750 கடனுகத் தரப்பட்டதாம்

புதுடில்லி, ஜூலை 22—

சேரி ஒழிப்புத் திட்டத்தின்கீழ், பல்வேறு மாநிலங்களிடமிருந்து இதுவரையில் மொதம் 65 வேலைத் திட்டங்கள் டில்லிக்குக் கிடைத்துள்ளனவாம். இவற்றில் 10 திட்டங்களை சென்னையும், 7 திட்டங்களை ஆந்திரமும், 17 திட்டங்களை மைசூரும், 19 திட்டங்களை கேரளமும் அனுப்பியிருக்கின்றன. மொத்தம் ரூ. 39,94,000 செலவில் வேலை மேற்கொள்ள இதுவரை அனுமதியளிக்கப்பட்டுள்ள 12 திட்டங்களில், தமிழ் நாட்டில் நமசிவாயபுரம் சேரி அபிவிருத்தித் திட்டத்துக்காக, சென்னை சர்க்காருக்கு ரூ. 82,750 கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

விரைவிலேயே முடிவு செய்யப்படுமாம்!

சென்னை, ஜூலை 23—

நிலவுடைமைக்கு அதிகபட்ச வரம்பு நிர்ணயிப்பது பற்றி விரைவிலேயே முடிவு செய்யப்படுமென்று சென்னை சட்டசபையில் நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.